சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். ஓ.எஸ்.111 /2020

2023 ம் ஆண்டு **04.12.2023** ம் தேதி சக்தி

என்பவரின் சாட்சியாகிய வாசா 3 ன் வாக்குமூலம்

(1969 ம் ஆண்டில் 44–வது பிரிவின்படி) திருமதி.பி.மோகனவள்ளி, பி.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்கள் முன்னிலையில், சார்பு நீதிமன்ற Grade II Bench Clerk திருமதி.எம்.தெய்வானை என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சக்தி | தாலூக்கா | பொள்ளாச்சி |
| க.பெ. (அ) த.பெ. | கனகராஜ் | சமயம் | இந்து |
| கிராமம் | பொள்ளாச்சி | வயது | 43 |

முதல் விசாரணை

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது ஆதார் அட்டை ஒளி நகல் தாக்கல் செய்கிறேன் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது). அது **வாசாஆ** 9 ஆகும். அதேபோல எனது வழக்கறிஞர் அடையாள அட்டை ஒளி நகல் தாக்கல் செய்கிறேன் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது). அது **வாசா ஆ 10** ஆகும். நான் கடந்த 20 ஆண்டு காலமாக பொள்ளாச்சியில் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். நான் பொள்ளாச்சி காந்தி நகர் பகுதியில் நிரந்தரமாக வசித்து வருகிறேன். நான் குடியிருந்து வரும் வீட்டிற்கு அடுத்து நான் வீதிகள் தள்ளி ராஜன் த/பெ.சுந்தரம் என்பவர் வசித்து வந்தார். ஒரே பகுதியில் இருவரும் வசித்து வந்ததால் அதன் அடிப்படையில் ராஜன் கடந்த 2016 ம் வருடம் அக்டோபர் மாதத்தில் என்னை சந்தித்து தமக்கு சொந்தமான வீட்டை உயில் எழுத வேண்டும் என்று கூறி அது சம்மந்தமான அனைத்து ஆவணங்களையும் என்னிடம் அளித்தார். அந்த காலகட்டத்தில் HSD பட்டாக்களை பொருத்து சார்பதிவாளர் அலுவலகத்தில் எந்த ஆவணங்களும் பதிவு செய்ய கூடாது என்ற அரசின் உத்தரவு நிலுவையில்

இருந்ததால் மேற்படி ராஜனின் வீட்டு மனை இடமும் HSD பட்டா என்பதால் உயில் சாசனம் பதிவு செய்ய முடியாது என்று நான் அளித்த சட்ட ஆலோசனையை ஏற்றுக்கொண்ட ராஜன் பதிவு செய்யப்படாத உயில் சாசனத்தை தயார் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொண்டதால், அவர் கூறிய சரத்துக்களின் படி நான் உயில் சாசனத்தை தயார் செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் அந்த உயில் சாசனம் வாசாஆ 4 என்றால் சரிதான். அந்த உயில் சாசனம் கடந்த 20.10.2016 அன்று தேதியில் எழுதப்பட்டது. ராஜன் கேட்டுக்கொண்டதன் படி நான் மேற்படி உயில் சாசனத்துடன் ராஜன் வீட்டிற்கு நேரில் சென்று அங்கு ஒரு பாலசுப்பிரமணியம் என்பவரும் ராஜனும் இருந்தனர். சிறிது நேரம் கழித்து மாயவன் என்பவர் வந்தார். நான் மற்றும் மாயவன் உயில் சாசனத்தை ராஜனுக்கு படித்து காண்பித்தோம். அந்த சரத்துக்கள் அனைத்தும் சரி என்று ஒப்புக்கொண்டு எங்கள் மூவர் முன்னிலையில் அந்த உயில் சாசனத்தின் அனைத்து பக்கங்களிலும் கைரேகை வைத்தார். அவர் கைரேகை வைத்ததை நாங்கள் மூவரும் நேரடியாக பார்த்தோம். பின்பு மாயவன், பாலசுப்பிரமணியம் சாட்சிகளாக கையெழுத்திட்டனர். அதற்கு பின்பு நான் கையெழுத்து செய்து எனது வழக்கறிஞர் முத்திரையை பதித்தேன். இவ்வாறு உயில் சாசனம் தயார் செய்தபோது ராஜன் நல்ல மனநிலையில் ஆரோக்கியமான உடல்நிலையில் இருந்தார். இவ்வாறு உயில் சாசனம் தயார் செய்த பின்பு நாங்கள் கலைந்து சென்று விட்டோம். தற்சமயம் கடந்த சில வருடங்களுக்கு முன்பு ராஜன் இயற்கை மரணம் அடைந்துவிட்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியும். காலம் சென்ற ராஜன் சொல்லி நான் தயார் செய்த உயில் சாசனம் தான் இந்த வழக்கு சம்மந்தமான உயில் சாசனம் ஆகும்.

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது வழக்கறிஞர் பதிவு எண் MS 1959/2003 ஆகும். சாட்சிகளாக இருந்த மாயவன், பாலசுப்பிரமணியம் மற்றும் உயில் எழுதி வைத்த ராஜன் ஆகியோர் இருந்தனர். 2016ம் ஆண்டு அக்டோபர் மாத முதல் வாரத்தில் என்னிடம் தமது சொத்தைப் பொருத்து உயில் சாசனம் எழுத வேண்டுமென்று என்னிடம் கேட்டுக்கொண்டார். அந்த உயில் சாசனம் எழுதுவதற்குண்டான சம்மந்தப்பட்ட ஆவணங்களை என்னிடம் அளித்தார். அதனடிப்படையில் அந்த சொத்து விபரத்தை நான் தயார் செய்தேன். 2016 வருடம் HSD பட்டாக்களை பொருத்து பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ய தடை உத்தரவு இருந்ததால் ராஜன் அந்த உயில் சாசனத்தை பதிவு செய்யவில்லை. அந்த உயில் சாசனத்தை நான் வழக்கமாக தட்டச்சு செய்யும் அலுவலகத்தில் கணினி தட்டச்சு செய்து அதை ராஜனிடம் ஒப்படைத்தேன். நான் உயில் சாசனத்தில் எழுதியதும் சாட்சியும் என்று குறிப்பிட்டுள்ளேன். அதில் கையெழுத்தும் செய்துள்ளேன். நானும் வாதியும் ஒரே பகுதியை சேர்ந்தவர்கள்என்பதால் வாதிக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி